

ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமி திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், எஸ்.பாறைப்பட்டி ஊராட்சியில் ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து ஜல்ஜீவன் திட்டத்தின் மூலம் ரூ.298.00 இலட்சம் மதிப்பீட்டில் எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி பகுதியில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தினை 17.02.2025 அன்று தொடங்கி வைத்தார்.அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பி. தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி உட்பட பலர் உள்ளனர்.

### சண்டிகர் தமிழ்மன்ற கட்டிட விரிவாக்கப் பணிக்கு ரூ.50 லட்சம்!

# தில்லித் தமிழ்ச்சங்க திருவள்ளுவர் கலையரங்க பணிக்கு ரூ.50 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காசோலைகள் வழங்கினார்!

சென்னை, பிப். 19 -

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சக்திபெருமாள், துணைத் தலைவர் பி. இராகவன் மற்றும் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் ஆகியோரிடம் வழங்கினார். மேலும், சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் பொதுச் செயலாளர் ராஜசேகர், பொருளாளர் சிவசுப்ரமணியம், இணைப் பொருளாளர் குணசேகரன் ஆகியோரிடம் வழங்கினார்.

'நமது தாய்மொழியான தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி, இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது, தாய்மொழியாக இருந்திருக்குமானால், உலகப் பொது மொழியாகவே ஆகியிருக்கும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழியின் சிறப்பினை போற்றினார். இத்தகைய வளமிக்க மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்து, தமிழர்களின் நூற்றாண்டுக் கனவை மெய்யாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பல்வேறு சூழல் காரணமாக புலம் பெயர்ந்து பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் வருங்காலத் தலைமுறையினர் செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பையும் செம்மையையும் உணர்ந்து கொள்ளும் வகையிலும், பிற மாநிலத்தவர் தமிழ் மொழியை அறிந்து கொள்ளும் வகையிலும், பண்பாட்டு வேர்களைக் காப்பதற்காகவும் இந்தியாவின் பிற மாநிலங்களில் தமிழ்ச் சங்கங்களை தோற்றுவித்து மொழி, இலக்கியம், கலை, நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அத்தகையப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்ச் சங்கங்களை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசால் தேவையான நிதியுதவிகள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 2024 - 2025ஆம் நிதியாண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில், "முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் 1997ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட திருவள்ளுவர் கலையரங்கத்தில் தில்லி வாழ் தமிழர்களில் வழித்தோன்றல்கள் பயனுறும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, நடனம் மற்றும் இசை வகுப்புகள் நடத்துதல். தமிழ் சார்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழிணையக் கருத்தரங்குகள் உள்ளிட்ட தமிழ் சார்ந்த நிகழ்வுகள் நடத்திட ஏதுவாக கலையரங்கத்தினைப் புனரமைத்திட தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்" என்றும்,

"சண்டிகர் வாழ் தமிழர்களின் இளந்தலைமுறையினர் தமிழ் மொழியின் சிறப்பினையும் கலைப் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, ஆடற்கலை, இசைக்கலை உள்ளிட்ட நுண்கலைகளைப் பயிற்றுவிக்க ஏதுவாக சண்டிகர் தமிழ் மன்றக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 50 இலட்சம் வழங்கப்படும்" என்றும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்த அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், சண்டிகர் தமிழ் மன்றத்திற்கு 50 இலட்சம் ரூபாயும், என மொத்தம் 1 கோடி ரூபாய் நிதி விடுவித்தும், தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து 'அகரம் முதல் சிகரம் வரை' திட்டத்தினை செயல்படுத்தும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டு, அதன்படி, தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகளுக்கும், சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் நிர்வாகிகளுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் பேரூராட்சி பகுதியில் 15.02.2025 அன்று சுற்றுலாத்துறையின் சார்பில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கென கானாடுகாத்தான் அரண்மனை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர், 16.02.2025 அன்று சிவகங்கை மாவட்டம், கீழடியில் நடைபெற்று வரும் 10ம் கட்ட அகழாய்வு பணியினை பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் , மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி, தொல்லியியல்துறை இணை இயக்குனர் சிவானந்தம், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், அருங்காட்சியக இணை இயக்குநர் ரமேஷ், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை மத்திய தொகுதி, ஆரப்பாளையம் பகுதிக்குட்பட்ட 21, 22, 57, 58 வார்டுகளில் உள்ள மாற்றுத் திறனாளிகள் 8 நபர்களுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர்களை மேலப்பொன்னகரம் 2வது தெரு, திராவிடன் படிப்பகம் அருகில், மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சருமான முனைவர். பழனிவேல் தியாகராஜன் வழங்கினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மதுரை மேயர் இந்திராணி பொன்வசந்த், முன்னாள் துணை மேயர், மிசா.பாண்டியன், முன்னாள் பகுதி கழக செயலாளர் பொன்வசந்த், கழக பொதுக்குழு உறுப்பினர் வைகை.எம்.பரமன், ஆரப்பாளையம் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ்.மாறன், வட்ட கழகச் செயலாளர் சீனி.ரமேஷ், கஜேந்திரன், சுரேஷ் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், பாண்டி, உதயகுமார், பி.டி.ஆர்.கண்ணன் வட்ட கழக பொறுப்பாளர்கள் துரைமணி, ராஜா, ராமச்சந்திரன், மதிச்சியம் சிவக்குமார், தெய்வகுமார், ரவி, முத்துகுமார், கார்த்திக், வினோதினி, சுசிலா மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சட்டமன்ற தொகுதி நயினார் கோவில் ஒன்றியம் பணிதவயல் கிராமத்தில் பரமக்குடியிலிருந்து சாத்தனூர் வரை செல்லும் தடம் எண் 21ம் எண் பேருந்தை பள்ளி மாணவர்களின் நலன் கருதி மாலை வேளையில் பணிதவயல் வரை நீட்டித்து இன்று முதல் இயக்க ஆவண செய்து பேருந்தை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன்.கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் நயினார்கோவில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் அண்ணாமலை , ஒன்றிய கழக நிர்வாகிகள்,அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணியில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் தரை தளம் மற்றும் பன்னிரண்டு தளங்களுடனும் டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள்.மதுரை மாட்டுத்தாவணி அருகே வேலைகள் துவங்கும் நிகழ்வில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன் , மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சட்டமன்ற உறுப்பினர் புதூர் பூமிநாதன், துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் சரவணபுவனேசுவரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சேடப்பட்டி சின்னகட்டளைஅரசு_உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்பு பள்ளி வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தை தூய்மை செய்து மாணவர்கள் பயன்பாட்டிற்கு பயன்பெறும் வகையில் சரி செய்து தரும்படி கோரிக்கை வைத்ததை அடுத்து அந்தப் பணியினை தலைமை செயற்குழு உறுப்பினர் இள.மகிழன் தமது சொந்த செலவில் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் ஜெயசந்திரன்,செல்வபிரகாஷ், எழுமலை பேரூர் செயலாளர் ஜெயராமன், வழக்கறிஞர் சேதுராமன்,மாவட்ட பிரதிநிதி ரமேஷ்,வார்டு செயலாளர் குமார்,உத்தபுரம்இளைஞரணி செல்வபிரபு,அயலக அணி துணை அமைப்பாளர் வினோத், இளைஞரணி ரமேஷ், தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அரூன்,இளைஞரணி முத்தையா, வழக்கறிஞர் அஸ்வா,லிங்கப்பநாயக்கனூர் உதயா,சந்துரு,பரத், தொட்டப்பநாக்கனூர் மணி, நவநீதன், மதன், பூச்சிபட்டி ரமேஷ் மற்றும் கழக உறுப்பினர்கள் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் கே.எஸ். தங்கபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தில் Y வடிவ இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.அந்தப் பாலத்திற்கு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பாலம் என பெயர் சூட்ட வேண்டும்.என்று முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு நடைபெற்ற கூட்டத்தில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.உடன் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர் ராமன்,நெல்லையப்பன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், மற்றும் ஊராட்சி குழு உறுப்பினர்கள் உள்ளனர்.